Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO.135/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சோதீஸ்வரா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கணபதி | தொழில் | இராணுவம் |
| கிராமம் | சின்னகம்மியப்பட்டு | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 1st day of April 2025

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.- (1-ம் எதிரி ஆஜர், 2 முதல் 4 வரையிலான எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.)**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இராணுவத்தில் பணி செய்கிறேன். அ.சா.1 கணபதி என்னுடைய தந்தை ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என்னுடைய ஊர்காரர்கள். 20.10.2018 அன்று மாலை 07.00 மணியளவில் என்னுடைய சித்தப்பா அ.சா.2 உத்திரமூர்த்தி அவருடைய வீட்டிறகு சென்று கொண்டிந்தபோது, வழியில் நின்றுக்கொண்டிருந்த அவருடைய நண்பர் ராமசந்திரமூர்த்தி என்பவரை ஏன் வழியில் நிற்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு, வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன்பின்னர் ஆஜர் 1-ம் எதிரி மூர்த்தி அ.சா.2 உத்திரமூர்த்தியை அதே இடத்தில் வைத்து என்னுடன் பேசிக்கொண்டிருந்தவரை தள்ளி நிற்க சொல்லி சொல்ல நீ யார் உனக்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா என்று சொல்லி தேவிடியா பையா என்று திட்டி கன்னத்தில் கையால் அறைந்துவிட்டார்.

2. நான் அந்த சமயத்தில் பால் வாங்க சம்பவ இடத்தில் கடையில் என் அப்பாவுடன் இருந்தேன். என் சித்தாப்பவுடன் இருந்த அ.சா.3 வசந்தன் சண்டையை விலக்கி என் சித்தப்பாவை அழைத்து சென்றுவிட்டார். அதன்பின்னர் 1-ம் எதிரி மூர்த்தி அவருடைய மகன்கள் 2, 3 எதிரிகளான விக்னேஷ், வினோத் ஆகியோர் என்னுடைய

சித்தப்பா எங்கே இருக்கிறார் என்று தேடிக்கொண்டு இருந்தார்கள். என்னுடைய பாட்டி வீட்டிற்கு சென்று என் சித்தப்பாவை கேட்டு அவனை ஒழிக்காமல் விடுவதில்லை என்று மிரட்டியுள்ளனர். அதன்பின்னர் என் சித்தப்பா அ.சா.2 உத்தரமூர்த்தி அ.சா.3 வசந்தன் இருவரும் எனது அப்பா அ.சா.1 கணபதியை தேடிக்கொண்டு கடைக்கு வந்தார்கள். நடந்ததை என் தந்தையிடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதற்குள் 1 முதல் 4 எதிரிகள் அங்கு வந்து எனது தந்தையை இரும்பு பைப்பால் ஆயுதங்களால் தாக்கினார்கள். அதனால் என் தந்தைக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. 2-ம் எதிரி விக்னேஷ் என் தந்தையை வபிடித்து கொள்ள 1-ம் எதிரி மூர்த்தி என் தந்தையை இரும்பு பைப்பால் தாக்கினார். 3-ம் எதிரி வினோத் மற்றும் 4-ம் எதிரி தமிழ்செல்வன் ஆகியோர் என் சித்தப்பாவை அதே இரும்பு பைப்பால் அடித்தார்கள். என் சித்தாப்பாவிற்கு வலது கை விரல் நசுங்கிவிட்டது. 3 பற்கள் உடைந்துவிட்டது. என்னை 4-ம் எதிரி தமிழ்செல்வன் அதே இரும்பு பைப்பால் அடித்தார். எனக்கும் அதனால் பின்பக்க தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது.

3. காயம்பட்ட நான் என் சித்தப்பா மற்றும் அப்பா திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.3 வசந்தன் தகவல் சொல்ல சிகிச்சைக்காக சம்பவம் நடந்த அன்றே சேர்ந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போதும் என் தந்தை போகும்பொழுது வரும்பொழுது எதிரிகள் அச்சுறுத்தி வருகிறார்கள். உங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று மிரட்டி வருகிறார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

என் சித்தப்பா சென்றபோது நடந்த சண்டையை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முதலில் என் சித்தப்பாவிற்கு நடந்த சம்பவம் யாருடைய அச்சுறுத்தலால் நடந்தது என்ற எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பால் செசைட்டியிடம் நான் எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் இரவு 07.30 மணி இருக்கும். ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்றால் நான் மயக்க நிலையில் இருந்தேன். சம்பவம் நடந்து முக்கால் மணி நேரம் கழித்து ஆம்புலன்ஸ் வந்திருக்கும். அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் ஆம்புலன்ஸ் ஏறி 20 நிமிடத்தில் வந்தோம். மருத்துவர் என்னை நான் பெட்டில் சேரும்போது விசாரித்தாரா என்றால் விசாரித்தார். நான் சொன்ன விவரத்தை தான் மருத்துவர் எழுதிக்கொண்டார்

என்றால் ஆம். மருத்துவர் விவாரித்து எத்தனை மணிக்கு போலீசார் வந்தார்கள் என்றால் அரை மணி நேரம் கழிதது முதல் உதவி சிகிச்சை முடித்த பின்னர் வந்தார்கள். போலீசார் முதலில் யாரை மருத்துவமைனயில் விசாரித்தார்கள் என்றால் என் தந்தையை விசாரித்தார்கள். யாரிடம் போலீசார்வாக்குமூலம் பபெற்றார்கள் என்றால் 3 பேரிடமும் வாக்குமூலம் பெற்றார்கள். அதன்பின்னர் போலீசார் எப்போது விசாரித்தார்கள்என்றால் அதன்பின்னர் என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

3 பேரும் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தோம் என்றால் தறபோது நினைவில்லை. போர வழியில் நடந்த சம்பவத்திற்காக தான் என் தந்தை புகார் கொடுத்தார் என்றால் அந்த சம்பவத்திற்காக இல்லை. பால் செசைட்டியில் தாக்கப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் அங்கு பால் ஊற்ற நிறைய நபர்கள் வந்திருந்தார்கள் என்றால் இல்லை. பால் செசைட்டி திருப்பத்தூரில் இருந்து வாணியம்பாடி செல்லும் மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். எங்கே வைத்து தாக்கினார் என்றால் கடைக்கு வெளியே வைத்து தாக்கினார்கள். கடைக்கு வெளியே என்றால் ரோடு என்றால் இல்லை. நான் சம்பவத்தின்போது அந்த இடத்தில் நான் இல்லை என்றாலும் எனக்கு ஏற்பட்ட காயம் பால் கேனை ஏற்றும்போது தவறி விழுந்து ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல.

சம்பவத்தின்போது நான் அங்கு தான் இருந்தேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.புகார் மற்றும் வாக்குமூலத்தில் சொல்லப்படாத இறுதி அறிக்கை தாக்கல் செய்த பின்னர் நடந்த சம்பவத்தை பற்றி நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் அது சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுத்துள்ளோனா என்றால் இல்லை. அவ்வாறான சம்பவம் ஏதும் நடந்திருந்தால் புகார் கொடுத்திருப்போம் என்றாலும், அதனால் அந்த சம்பவம் நடக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் கொடுக்கவில்லை. என்னுடைய சித்தப்பா எதிரிகளுக்கு இருந்த முன்விரோதம் காரணமாக கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.